

சென்னை ஆலந்தூர் மண்டலம் 157வது வார்டில் நடந்த உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமினை அமைச்சர் தா.மோ.அன்பரசன் பார்வையிட்டார். உடன் மண்டல குழு தலைவர் சந்திரன் உள்ளார்.



நதிகளுக்கு நன்றி செலுத்தும் வகையிலான ஆடிப் பெருக்கு விழா, சென்னை எம்ஜிஆர் ஜானகி மகளிர் கலைக் கல்லூரியில் கொண்டாடப்பட்டது. இதில் நூற்றுக்கணக்கான மாணவியர் கிராமத்துப் பாணியில் தாவணி அணிந்து கலந்து கொண்டனர்.



சென்னை மேற்கு மாவட்டம் மாதவரம் தொகுதி புழல் ஒன்றிய பாரதிய ஜனதா கட்சி அலுவலகத்தை மாவட்டபொதுச் செயலாளர் மாதவரம் எம்.ஏகுமரன் திறந்துவைத்தார். அவருடன் மாவட்ட பொதுச் செயலாளர் சத்யா, மாவட்ட செயலாளர் அருண்குமார், புழல் ஒன்றிய தலைவர் ஆர்.ஜி.எஸ் ரஜினி, சத்ய நாராயணன் மற்றும் புழல் ஒன்றிய அனைத்து நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# சென்னை திரு.வி.க.நகர் மண்டலத்தில் ரூ.46.75 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்டப்பணிகள்: அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேரில் பார்வையிட்டு ஆய்வு



**சென்னை,ஆக.02**

இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு. பி. கே. சேகர்பாபு அவர்கள், திரு.வி.க.நகர் மண்டலத்தில் நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்டப்பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள், வார்டு-69, முத்துகுமரப்பா தெருவில் பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் ரூ.13.47 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் நவீன சமுதாய நலக்கூடத்தின் கட்டுமானப் பணியினைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு அலுவலர்களுக்கு ஆலோசனைகளை வழங்கினார். இப்பணிகளை விரைந்து முடித்து பயன்பாட்டிற்குக் கொண்டு வர அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த சமுதாய நலக் கூடமானது, தரைத்தளம் மற்றும் மூன்று தளங்களுடன் 40,300 சதுர அடி பரப்பளவில் கட்டப்பட்டு வருகிறது. தரைத்தளத்தில் 35 எண்ணிக்கையிலான நான்கு சக்கர வாகனங்கள், 50 எண்ணிக்கையிலான இருசக்கர வாகனங்கள் நிறுத்தும் வகையில் வாகன நிறுத்துமிடம், முதல் தளத்தில் 435 இருக்கைகளுடன் உணவு அருந்தும் இடம், இரண்டாம் தளத்தில் 800 இருக்கைகளுடன் திருமண நிகழ்வு கூடம், மூன்றாம் தளத்தில் 10 எண்ணிக்கையிலான ஓய்வறைகளுடன் கட்டப்பட்டு வருகிறது.

தொடர்ந்து, சோமையா தெருவில் உள்ள சென்னை உயர்நிலைப்பள்ளியில் ரூ.2.75 கோடி மதிப்பீட்டில் 10 வகுப்பறைகளுடன் கட்டப்பட்டு வரும் கூடுதல் பள்ளிக் கட்டடம் மற்றும் ரூ.4.19 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையக் கட்டுமானப் பணி, ரங்கசாமி தெருவில் உள்ள சென்னை நடுநிலைப்பள்ளியில் ரூ.3 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் கூடுதல் பள்ளிக் கட்டடப் பணி மற்றும் இப்பள்ளியில் எதிரில் அமைந்துள்ள கால்பந்து மைதானத்தில் ரூ.49 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் மேம்பாட்டுப் பணி, மார்க்கெட் தெருவில் உள்ள சென்னை பெண்கள் மேல் நிலைப்பள்ளியில் ரூ.8.35 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் கூடுதல் பள்ளிக் கட்டடப் பணி ஆகியவற்றினை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பார்வையிட்டு பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

பின்னர், வார்டு-67, பேப்பர் மில்ஸ் சாலையில் ரூ.4.82 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் ரூ.9.68 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் வார்டு அலுவலகம் ஆகியவற்றின் கட்டுமானப் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார். பணிகளை உரிய தொழில்நுட்ப வழிகாட்டுதல்களுடன் குறிப்பிட்ட காலத்திற்குள் முடித்திடும் வகையில் பணிகளை மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

**கலந்து கொண்டோர்**

இந்த ஆய்வின் போது, மேயர் ஆர். பிரியா, மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன், மத்திய வட்டார துணை ஆணையர் எச்.ஆர். கௌஷிக், மண்டலக் குழுத் தலைவர் மு. சரிதா மகேஷ்குமார் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், அலுவலர்கள் உடனிருந்தனர்.

# சென்னையில் ஸ்டார் ஓட்டலில் ரூ.28.13 லட்சம் கையாடல் செய்த ஊழியர் கைது

**சென்னை ஆக 02-**

சென்னை, ஆயிரம் விளக்கு பகுதியில் வசித்து வரும் பர்வேஷ் நிசார் தாமத், என்பவர் அண்ணாசலை பகுதியில் உள்ள ஸ்டார் ஓட்டலில் ஜெனரல் மேனஜராக வேலை செய்து வருகிறார். இவர் மேற்படி ஓட்டலில் கணக்கு வழக்குகளை சரிபார்த்த போது, அலுவலகத்தில் மேலாளராக பணிபுரிந்து வந்த பிரபு என்பவர் சுமார் ரூ.28,13,607/- கையாடல் செய்திருப்பது தெரியவந்தது. இது குறித்து பர்வேஷ் நிசார் தாமத் ஆயிரம்விளக்கு காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

ஆயிரம் விளக்கு காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து மேற்படி வழக்கில் தொடர்புடைய குற்றவாளியை தேடிவந்தனர்.

விசாரணையில் குற்றவாளி பிரபு பாங்காக் சென்றிருப்பது தெரியவந்ததின் பேரில், சென்னை விமான நிலையத்திற்கு எல்.ஓ.சி. அனுப்பப்பட்டது. இந்நிலையில் பாங்காக்கிலிருந்து சென்னை திரும்பிய பிரபு, என்பவரை குடியுரிமை அதிகாரிகள் பிடித்து தகவல் தெரிவித்ததின் பேரில் ஆயிரம் விளக்கு போலீசார் பிரபுவை கைது செய்தனர். அவரிடமிருந்து 2 செல்போன்கள், ஏ.டி.எம். கார்டு மற்றும் 1 இருசக்கர வாகனம் பறிமுதல் செய்யப்பட்டது.

விசாரணையில் வாடிக்கையாளர்கள் ஓட்டலில் செலுத்தும் கட்டணத்தை, எதிரி பிரபு அவரது வங்கி கணக்கில் செலுத்த கூறியும், ரொக்கமாக பெறும் பணத்தை வைத்துக்கொண்டு, அவரது கிரிடிட் கார்டிலிருந்து ஓட்டல் வங்கி கணக்கிற்கு பணத்தை செலுத்திவிட்டு, பின்னர் கேன்சல் செய்து மீண்டும் பிரபு வங்கி கணக்கில் வரவு வைத்தும் மோசடி செய்துள்ளது தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட எதிரி பிரபு விசாரணைக்குப் பின்னர், நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

# ரவுடி காதுகுத்து ரவி துப்பாக்கி முனையில் கைது

**சென்னை ஆக 02-**

சென்னை வியாசர்பாடியைச் சேர்ந்த ரவுடி காதுகுத்து ரவி துப்பாக்கி முனையில் கைது செய்தனர். சேலத்தில் பதுங்கியிருந்த காதுகுத்து ரவியை துப்பாக்கி முனையில் கைது செய்தது தனிப்படை போலீஸ். வடசென்னையைச் சேர்ந்த இவர் மீது கொலை, கட்டப்பஞ்சாயத்து, நில அபகரிப்பு உள்பட பல்வேறு வழக்குகள் உள்ளன.

# திருவொற்றியூர் பகுதியில் இருசக்கர வாகனம் திருடிய கைது

**சென்னை ஆக 02-**

சென்னை, திருவொற்றியூர், காலடிபேட்டை பகுதியில் வசித்து வரும் ராஜ்கமல், என்பவர் வழக்கறிஞராக உள்ளார். ராஜ்கமல் கடந்த 14.ந் தேதி அன்று மாலை, டி.எச்.சாலை, தேரடி அருகே உள்ள எஸ்.பி.ஐ.ஏ.டி.எம். முன்பு அவரது இருசக்கர வாகனத்தை நிறுத்திவிட்டு, மீண்டும் வந்து பார்த்தபோது, அவரது இருசக்கர வாகனத்தை யாரோ திருடிச் சென்றது தெரியவந்தது. இது குறித்து ராஜ்கமல் கடந்த 31 ந் தேதி அன்று, திருவொற்றியூர் காவல் நிலைய குற்றப்பிரிவில் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர். திருவொற்றியூர் காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி இருசக்கர வாகனத்தை திருடிச் சென்ற எதிரிகள் 1.ரஞ்சித்குமார், 2.அஜித்குமார், ஆகிய இருவரை கைது செய்தனர். அவர்களிடமிருந்து புகார்தாரரின் இருசக்கர வாகனம் மீட்கப்பட்டது. கைது செய்யப்பட்ட எதிரிகள் இருவரும் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

# அண்ணாநகர் பகுதியில் சகோதரரை கொலை செய்த வழக்கில் குற்றவாளிக்கு ஆயுள்தண்டனை

**சென்னை ஆக 02-**

அண்ணாநகர் பகுதியில் கடந்த 2021ம் ஆண்டு லூர்து சாமி, என்பவரை அவரது சகோதரர் இருதயம் என்பவர் மது போதையில் ஏற்பட்ட தகராறில் கத்தியால் தாக்கியதில் லூர்துசாமி இரத்த காயமடைந்து மரணம் அடைந்தார்.

**ஆயுள் தண்டனை**

இது குறித்து அண்ணாநகர் காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்து எதிரி இருதயம், என்பவரை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினர். அண்ணாநகர் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினரால் முறையாக விசாரிக்கப்பட்டு, நீதிமன்றத்தில் இறுதி அறிக்கை தாக்கல் செய்து, அல்லிக்குளம், 20வது கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை நடைபெற்று வந்த நிலையில், வழக்கு விசாரணை முடிவடைந்து இவ்வழக்கில் நேற்று முன் தினம் தீர்ப்பு வழங்கப்பட்டது.

மேற்படி வழக்கில் எதிரி இருதயம் மீது குற்றம் நிரூபிக்கப்பட்டதால், குற்றவாளி இருதயம், என்பவருக்கு ஆயுள் தண்டனை மற்றும் ரூ.5,000/- அபராதமும், அபராதம் செலுத்த தவறினால் மேலும் 6 மாதங்கள் சிறை தண்டனை அனுபவிக்க வேண்டும் என கனம் நீதிபதி அவர்கள் தீர்ப்பு வழங்கினார்.

இவ்வழக்கில் சிறப்பாக புலனாய்வு செய்து, நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு சிறப்பு கவனம் செலுத்தி குற்றவாளிக்கு உரிய தண்டனை பெற்று தந்த அண்ணாநகர் காவல் நிலைய ஆய்வாளர் மற்றும் நீதிமன்ற அலுவல் பணிபுரியும் காவல் குழுவினரை உயரதிகாரிகள் வெகுவாகப் பாராட்டினர்.

# மாம்பலம் பகுதியில் திருட முயன்ற வடமாநில 4 பெண்கள் கைது

**சென்னை ஆக 02-**

சென்னை, சைதாப்பேட்டை, அப்பாவு நகர் பகுதியில் வசித்து வரும் சரவணன், என்பவர் இரும்பு கடை நடத்தி வருகிறார். இவர் நேற்று முன் தினம் மதியம் தி.நகர், போத்திஸ் துணி கடை முன்பு நடந்து சென்று கொண்டிருந்த போது, கூட்ட நெரிசலை பயன்படுத்தி 4 பெண்கள் மேற்படி சரவணன் பேண்ட் பாக்கெட்டில் வைத்திருந்த மணிபர்ஸை திருட முயன்றுள்ளனர். சுதாரித்துக்கொண்ட சரவணன் சத்தம்போடவே அருகிலிருந்த பொதுமக்கள் மேற்படி 4 பேரையும் மடக்கிப்பிடித்து காவல் நிலையத்தில் ஒப்படைத்தனர். மாம்பலம் காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் விசாரணையில் பிடிப்பட்ட நபர்கள் 1.சோனம், 2.நேகா, 3.சாவித்திரி பாய், 4.மோகினிபாய், மாநிலம் என்பது தெரியவந்தது. மேலும் இது குறித்து சரவணன் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து கைது செய்தனர்.மேலும் விசாரணையில் எதிரிகள் இரயில் மூலம் பல்வேறு மாநிலங்களுக்கு சென்று பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களுக்கு சென்று திருட்டு சம்பவத்தில் ஈடுபட்டது தெரியவந்தது. மேலும் எதிரி சோனம் மீது 8 வழக்குகளும், நேகா மீது 1 வழக்கு உள்ளதும் தெரியவந்தது. கைது செய்யப்பட்ட மேற்படி எதிரிகள் 4 நபர்கள் விசாரணைக்குப்பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

# ஆன்லைன் மோசடியில் போலி வங்கி கணக்கு தொடங்கி சைபர் குற்றவாளிகளுக்கு உதவிய தம்பதி கைது

**சென்னை ஆக 02-**

சென்னை அரும்பாக்கம் பகுதியைச் சேர்ந்த வாதி சல்மான் சலீம், என்பவர் நடத்தி வரும் டிராவல் ஏஜென்ட் அலுவலகத்தில் வெண்டர் நிறுவனத்தில் இருந்து வந்திருந்த இ.மொயிலி ல் கொடுக்கப்பட்டிருந்த தனியார் வங்கி கணக்கில் 17.07.2025 அன்று பணம் ரூ.17,72,868/- பணம் செலுத்திவிட்டதாகவும், பின்னர் வெண்டர் நிறுவனத்தில் பணம் அனுப்பி உள்ளது குறித்து கேட்ட போது. அவர்கள் அந்த மின்னஞ்சல் முகவரி அவர்களுடையது இல்லை என்றும் மேற்படி வங்கி கணக்கும் அவர்களுடையது இல்லை என தெரிவித்துள்ளனர்.

சல்மான் சலீம் ஏமாற்றப்பட்டதை உணர்ந்து இது சம்மந்தமாக ஆன்லைனில் புகார் பதிவு செய்தும், பின்னர் மேற்கு மண்டலம் சைபர் கிரைம் காவல் நிலையத்தில் நேரில் ஆஜராகி கொடுத்த புகாரின் பேரில் கடந்த 28.ந் தேதி அன்று வழக்கு பதிவு செய்யப்பட்டு போலீசார் புலன் விசாரணை மேற்கொண்டனர்.

மேற்கண்ட புகாரில் உடனடி நடவடிக்கை எடுத்திட சென்னை பெருநகர காவல் ஆணையாளர் ஆ.அருண், உத்தரவின் பேரில், மேற்கு மண்டல இணை ஆணையர் திஷா மிட்டல், அறிவுரையின் பேரில், சென்னை பெருநகர காவல், மேற்கு மண்டல சைபர் கிரைம் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினரின் புலன் விசாரணையில் புகார்தாரர் 17ந் தேதி ந்தேதி பணம் அனுப்பிய வங்கி கணக்கானது சிவகாசியில் உள்ள தனியார் வங்கி கணக்கு என்பதும், மேற்படி பணத்தினை வங்கி கணக்கிலிருந்து உரிமையாளர் காசோலைகள் மூலமாக எடுத்துவிட்டதாக தெரியவந்ததால் மேற்படி வங்கி கணக்கின் உரிமையாளர் எதிரி புஷ்பா, மற்றும் அவரது கணவர் சதுரகிரி, ஆகியோரை காவல் குழுவினர் விருதுநகர் மாவட்டம் சிவகாசி, லட்சுமிபுரம் பகுதியில் உள்ள எதிரிகளின் வீட்டின் அருகில் வைத்து கைது செய்தனர். எதிரிகளிடம் இருந்து பணம் ரூ.2,30,000/-, 2 செல்போன்கள், வங்கி பாஸ்புக் மற்றும் செக்புக் ஆகியவை கைப்பற்றப்பட்டது.மேலும் விசாரணையில் எதிரி புஷ்பாவை மூகநூல் மூலமாக தொடர்பு கொண்ட அமெரிக்காவில் வசிக்கும் கிறிஸ் ஓட்டோ என்ற நபர் பல கோடி மதிப்பிலான பரிசு பொருட்களை அனுப்புவதாகவும், அதற்கான பார்சல் கட்டணத்தை டெல்டா கூரியர் சேவை நிறுவனத்தின் அஞ்சல் ஐடி ல் தெரிவிப்பார்கள் என கூறியதை நம்பி எதிரிகள் இருவரும் 03 வங்கி கணக்குகளை சைபர் கிரிமினல்கள் கேட்டவாறு தொடங்கி, அவற்றை சைபர் கிரிமினல்கள் கொடுத்த புது டெல்லி முகவரிக்கு போஸ்ட் செய்தும் பின்னர் புகார்தாரர் வங்கி கணக்கில் இருந்த வந்த பணம் ரூ.17,72,868/-ஐ சுய திரும்பப் பெறுதல் சோதனை வழியாக எடுத்து அவற்றை சைபர் கிரிமினல்கள் கொடுத்த பல வங்கி கணக்குகளில் deposit செய்ததாகவும் மீதமிருந்த பணம் ரூ.3,67,500./- அவர்களுடைய செலவிற்கு வைத்து கொண்டது தெரியவந்தது. விசாரணைக்குப்பின்னர் எதிரிகள் இருவரும் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

# மெட்ரோ ரயில் பணிக்காக வைத்திருந்த பேட்டரியை திருடியவர் கைது

**சென்னை ஆக 02-**

சென்னை, மெட்ரோ ரயில் நிறுவனத்தில் நிர்வாக உதவியாளராக பணிபுரிந்து வரும் வேலூரைச் சேர்ந்த அலெக்சாண்டர், என்பவர் வளசரவாக்கம், ஆற்காடு ரோடு, லட்சுமி நகர் பகுதியில் மெட்ரோ பணியில் இருந்தபோது, அங்கு மெட்ரோ ரயில் பணிக்காக வைத்திருந்த ஜெனரேட்டர் பேட்டரியை அடையாளம் தெரியாத ஒரு நபர் திருடிக் கொண்டு, இருசக்கர வாகனத்தில் தப்பிச் செல்ல முற்பட்டபோது, சுதாரித்துக் கொண்ட அலெக்சாண்டர் அருகிலிருந்தவர்கள் உதவியுடன் மேற்படி நபரை பிடித்து, காவல் கட்டுப்பாட்டறைக்கு தகவல் கொடுத்ததின்பேரில், உடனே சம்பவயிடத்திற்கு சென்ற வளசரவாக்கம் காவல் நிலைய காவல் குழுவினர் விசாரணை செய்தனர். வளசரவாக்கம் காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் விசாரணையில் பிடிபட்ட நபர் ராஜு என்பதும், சம்பவயிடத்தில் வைத்திருந்த ஜெனரேட்டர் பேட்டரியை யாருக்கும் தெரியாமல், திருடிக் கொண்டு, இருசக்கர வாகனத்தில் தப்பிச் செல்ல முற்பட்டபோது, பிடிபட்டதும் தெரியவந்தது.அதன்பேரில், வளசரவாக்கம் காவல் நிலைய குற்றப்பிரிவில் வழக்குப்பதிவு செய்து, திருட்டு சம்பவத்தில் ஈடுபட்ட எதிரி ராஜு, என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து மெட்ரோ பணிக்காக வைத்திருந்த பேட்டரி மீட்கப்பட்டு, குற்ற சம்பவத்திற்கு பயன்படுத்திய 1 இருசக்கர வாகனம் பறிமுதல் செய்யப்பட்டது.

# சென்னை மாநகர பகுதிகளில் காற்று மாசு கண்டறிய 75 அதிநவீன சென்சார்

**சென்னை ஆக 02-**

சென்னையில் காற்று மாசு கண்டறிய 75 அதிநவீன சுற்றுச்சூழல் சென்சார்கள் அமைக்க திட்டமிட்டுள்ளது. காற்று மாசு என்பது ஒரு உலகளாவிய பொது சுகாதார பிரச்னையாக உள்ளது. காற்று மாசுவால் இறப்பு, சுவாசம் மற்றும் இருதய நோய்கள், நரம்பியல் பாதிப்பு குறைபாடுகள் உட்பட பல விதமான ஆரோக்கியத்துக்கு எதிரான பாதிப்புகளை ஏற்படுத்துகிறது.

வடசென்னையில் அனல் மின் நிலையம், 10 மில்லியன் டன் உற்பத்தி திறன்கொண்ட பெட்ரோ கெமிக்கல் காம்ப்ளக்ஸ் மற்றும் எண்ணூர், மணலி போன்ற இடங்களில் காற்றை மாசுபடுத்தும் தொழிற்சாலைகள் அதிகளவில் உள்ளன. குறிப்பாக, திருவொற்றியூர், மணலி பகுதியில் இயங்கிவரும் ஒன்றிய அரசின் பொதுத்துறை நிறுவனங்களான எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை, சென்னை உரத் தொழிற்சாலை ஆகிய ஆலைகளில் இருந்து வாயு கழிவுகள், எண்ணெய்க் கழிவுகள் வெளியேற்றப்படுகிறது.இதன் காரணமாகவே, அப்பகுதிகளில், காற்று மாசு, நிலத்தடி நீர் மாசு உள்ளிட்ட சுற்றுச்சூழல் பிரச்சினைகள் நீண்ட காலமாக இருந்து வருகிறது. அதுமட்டுமின்றி, எண்ணூர், மணலி போன்ற தொழிற்சாலைப் பகுதிகளில் உள்ள காற்றில் நிக்கல், பாஸ்பரஸ், மக்னீசியம், லெட் உள்ளிட்ட ரசாயனம் மற்றும் உலோக கழிவுத் துகள்கள், நுண்துகள்களாக காற்றில் பறக்கும் போது பொதுமக்கள் சுவாசிக்கின்றனர். இதனால், மயக்கம், வாந்தி, தலைவலி, கண் எரிச்சல், மூச்சுத் திணறல் உள்ளிட்ட பிரச்னைகளை பொதுமக்கள் சந்திக்கக் கூடிய அவல நிலை ஏற்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட தொழிற்சாலைகள் விதிமீறி செயல்படுவதே காற்று மாசு அதிகரிக்க காரணமாகும். எனவே, சென்னையில் மாசு கட்டுப்பாட்டின் வாரியத்தின் விதிமுறைகளை மீறி இயங்கி வரும் தொழிற்சாலைகளைக் கண்டறிந்து, நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் வலியுறுத்தி வருகின்றனர். இதே போல், சென்னையின் பல்வேறு பகுதிகளில் புதிய கட்டுமானம், சாலை, வடிகால், பாதாள சாக்கடை, மின் புதைவடம் போன்ற பணிகள் காரணமாக பெரும்பாலான சாலைகள் புழுதிக்காடாக காட்சியளிக்கிறது.இந்நிலையில், சென்னை மாநகராட்சியானது நகரம் முழுவதும் சுற்றுச்சூழல் தரத்தை நேரடி கண்காணிப்பதற்காக 75 புதிய தொழில்நுட்ப அடிப்படையிலான சுற்றுச்சூழல் சென்சார்கள் அமைக்கும் திட்டத்தை தொடங்கியுள்ளது. சென்னையில் ஏற்கனவே, 15 சென்சார்கள் உள்ள நிலையில், புதிய சென்சார்கள் நகரின் 15 மண்டலங்களிலும் முக்கிய இடங்களில் இந்த சென்சார்கள் பொருத்தப்பட உள்ளன. இந்த சென்சார்கள் காற்றில் உள்ள தூசுகள் (பி.எம்.2.5, பி.எம்.10), மிகவும் நாசகர வாயுக்கள் (என்.ஓ.2, எஸ்.ஓ.2, சி.ஓ., ஓ.3) மட்டுமல்லாமல், காற்றின் வேகம், திசை, மழை அளவு, காற்றழுத்தம் உள்ளிட்ட பல தகவல்களை கண்காணிக்கும்.சென்னையின் 426 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில், ஒவ்வொரு 4 சதுர கிலோ மீட்டருக்கும் ஒன்று என்ற அடிப்படையில் சென்சார்கள் அமைக்கப்படும். இப்படியாக, நகரை 100 பகுதிகளாக பிரித்து அதில் முதற்கட்டமாக 75 முக்கிய இடங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. புதிய சென்சார்கள் பழைய சென்சார்களை விட அதிகம் பாராமேட்டர்களை கண்காணிக்கும். அதாவது காற்றின் வேகம், திசை, மழை அளவு, காற்றழுத்தம் போன்றவை கூட கண்காணிக்கப்படும். இந்த தகவல்கள் கட்டுப்பாட்டு மையத்தில் நேரலை கண்காணிப்புக்காக இணைக்கப்படும்.

இதனால் உடனடி சூழல் தரம் தகவல்கள் பெற முடியும்.மக்கள் நலனுக்காக முக்கிய இடங்களில் பொது டிஜிட்டல் திரைகள் மூலம் உள்ளூர் காற்றுத் தூய்மை நிலை நேரலை காட்டப்படும். இந்த திட்டத்தின் மூலம் மாசுக்கட்டுப்பாடு, சூழலை எதிர்கொள்ளும் திட்டம், சிக்னல் பகுதியில் புகை, புகை களையறிதல் போன்றவற்றில் அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க உதவும். இந்த புதிய முயற்சிக்கான செலவு ரூ.6.36 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது. திட்டம் முழுமையாக செயல்படும்போது, மக்கள் சுகாதாரத்தை பாதுகாப்பதும், சுற்றுச்சூழலை மாசில்லாமல் பாதுகாப்பதும் சாத்தியமாகும். இத்திட்டம் மூலம் பொதுமக்கள் நேரடி சூழல் தரத்தை அறிந்து, சீரான காற்றை சுவாசிப்பதற்கான விழிப்பு நுண்ணறிவு அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# சென்னையில் சூதாட்டத்தில் ஈடுபட்ட 7 பேர் சிக்கினர்

**சென்னை ஆக 02-**

தியாகராயர் நகரில் சர்வீஸ் அபார்ட்மென்ட்டில் சூதாட்டத்தில் ஈடுபட்ட 7 பேர் சிக்கினர். பிடிபட்டவர்களிடம் இருந்து ரூ.1 லட்சம் ரொக்கம், ஹூக்கா போதைப்பொருள், 30 சீட்டுக் கட்டுகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

**கைது**

வாடகைக்கு எடுத்து சூதாட்ட விடுதி நடத்திய மாயகிருஷ்ணன் உள்பட 7 பேரை மாம்பலம் போலீசார் கைது செய்தனர்.

